நாள் 08.05.2026

CC 298/2023

புசா 1

பெயர் –சாந்தகுமார்

த/பெ.–கந்தசாமி

வயது –48

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of May 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1, நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் கண்டுள்ள ளவழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் புகார் மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான் எஸ்.எஸ்.உயிரே என்ற பெயரில் டிராவல்ஸ் நடத்தி வருகிறேன். என்னுடைய நிறுவனத்தின் பெயரில் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் எதுவும் நான் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எதிரிக்கு எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் என்னுயைட வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். சாட்சிகள் வைத்து கடன் கொடுக்கப்பட்டதா என்றால் சாட்சிகள் யாரும் இல்லை நான் மட்டும்தான் இருந்தேன். தேதி மற்றும் கிழமை கூற இயலுமா என்றால் தேதி எனக்கு ஞாபகம் உள்ளது கிழமை ஞாபகம் இல்லை. எதிரி பதில் அறிவிப்பை கொடுத்த பிறகுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் வாகனங்களை பிட்டிங் அடிப்படையில் வாங்கி விற்பதற்கு கடன் கொடுப்பேன் என்றால் சரியல்ல.(பிட்டிங் என்றால் வேறு ஒரு நிறுவனம் கொடுத்த கடனில் வாங்கிய வாகனத்தை வாங்குவதற்கு கடன் கொடுப்பது என்று வழக்கறிஞர் தெளிவு கூறினார்).

3. அவ்வாறு பிட்டிங் அடிப்படையில் வாங்கப்பட்ட இருசக்கர வாகனத்தை வைப்பதற்கு பொள்ளாச்சி, கருப்பம்பாளையத்தில் எனக்கு ஒரு குடோன் உள்ளது என்றால் சரியல்ல. அந்த தொழிலை செய்வதற்கு பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டையில் உள்ள பிட்டிங் அடிப்படையில் வாகனத்தை வாங்கும் தரகர்கள் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. மேற்படி பிட்டிங் அடிப்படையில் வாகனம் என்னிடம் வாங்கிய நபர்கள் மீது பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டையில் நான் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. பொள்ளாச்சி நீதிமன்றத்தில் மட்டும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக மட்டுமே வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்று கூறியுள்ளேன், ஆனால் நிறைய நபர்கள் மீது பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நட்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பணம். அவற்றை திரும்ப கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரியை எனக்கு எப்படி பழக்கம் என்றால் கோட்டூரில் இரத்தபரிசோதனை நிலையம் வைத்துள்ளார் அதன் மூலம் எனக்கு பழக்கம். நான் கூறுவது பொய் என்றும் எதிரியின் பதிவு எண். TN 41 AS 7259 HF Delux Hero Honda வாகனத்தை பிட்டிங் அடிப்படையில் அவருடைய நண்பர் ஆனந்தராஜ் என்பவர் மூலமாக நான் வாங்கினேன் என்றும் அதன் அடிப்படையில்தான் எதிரி எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தின் பதிவு புத்தகம் மற்றும் காப்பீடு இன்னும் எதிரியின் வசம் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த வாகனத்தையே வாங்கவில்லை.

5. அந்த வாகனத்திற்கு நான் பணத்தை எதிரியிடம் கொடுக்கவில்லை என்றால் நான் அந்த வாகனத்தை வாங்கவில்லை. இந்த பிரச்சனைசம்மந்தமாக எதிரி கோட்டூர் காவல நிலையத்தில் பலமுறை புகார் செய்துள்ளார் என்றால் கோட்டூர் நிலையத்திற்கு எதிரி சம்மந்தமாக என்னை அழைத்து விசாரணை செய்யவில்லை. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் கோட்டூர் காவல் நிலையத்தில் இருந்து என்னை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றும் என்னுடைய செல்வாக்கால் விசாரணையை செய்யவிடாமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் ஆத்திரமடைந்து அவருடைய வாகனத்தில் இருந்த ஆதார் அட்டை மற்றும் கையெழுத்து மற்றும் பூர்த்தி செய்யாமல் இருந்து காசோலையை எடுத்து மோசடி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. எந்த ஒரு கடனுக்காகவும் எதிரி வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் கண்டுள்ள கையெழுத்து எதிரியின் கையொழுத்து கிடையாது என்றால் சரியல்ல, அவருடைய கையொப்பம்தான். எதிரியின் வாகனத்தை விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்று நினைத்தேன் என்றும் அதனை எதிரி தடுத்ததால் ஆத்திரத்தில் அவர் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வாகனத்தை 3ம் நபருக்கு கொடுத்து அதனை பயன்படுத்துவதற்கு அனுமதித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7. எதிரி இரத்த பரிசோதனை நிலையத்தில் சேவை அடிப்படையில் செய்து வருகிறார் என்றும் அவருக்கு கடன் வாங்குவதற்கான எந்த தேவையும் எழவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், அந்த கடனுக்காக வழக்கு

காசோலை கொடுக்கப்படவில்லை என்றும் அதனால் என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>மறுவிசாரணை</u> – இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.